1983 சனவரி 27]

காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை.

*வினா எண். 14 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனையில் படுக்கை வசதிகளோடு கூடிய டி.பி. வார்டு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: 34 படுக்கைகள் கொண்ட ஒரு காச நோய் வார்டு ஏற்கனவே இங்கு உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகரில் பெரிதும் நெசவாளிகள் இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழில் செய்கின்றவர்கள் அதிகமாக அந்த நோய்க்கு ஆளாக்கப்படுகிறார்கள். அங்கே இருக்கின்ற அந்த வார்டு போதுமான வசதிகள் கொண்டதாக இல்லை. கூடுதலான படுக்கை வசதிகள் பெற நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய தலைநகரமாக காஞ்சிபுரம் விளங்கிக் கொண்டுவருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 776 படுக்கைகள் கொண்ட டி.பி. சானிடோரியம் குரோம்பேட்டை தாம்பரத்திற்கு இடையிலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் செங்கற்பட்டு வேலூர் மருத்துவமனையில் 10 எமர்ஜென்சி டி.பி. படுக்கைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் திருப்புக்குழி உத்திரமேரூர், பரனூர், அய்யம்பேட்டை, சூரலவாக்கம் பகுதிகளிலே டி.பி. சிகிச்சை செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் நடமாடும் மருத்துவமனை அங்கே தாம்பரத்திலே இருக்கிறது. இதற்கு முன்பு எழுப்பப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆகவே செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களை விட நல்ல சாதகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் என்னுடைய கேள்வியில் காஞ்சிபுரம் தாலுக்காவில் மட்டும்தான் கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பேர்கள் நெசவாளத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நடவடிக்கைகள் எடுப்பாரா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் துரித நடவடிக்கை எடுக்கப்படும். நடமாடும் காச நோய் மருத்துவமனை மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதிக்கு நிச்சயமாக அனுப்பப்படும் என்று ஒரு வாக்குறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காகவும், கைத்தறித் தொழிலாளர்களுக்காகவும் வேண்டி காச நோய் மருத்துவமனை அதிகமாக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடஆற்காடு மாவட்டத்திலே உள்ள காச நோய் மருத்துவமனையில் பீடித் தொழிலாளர்களுக்காக மத்திய அரசினால் வழங்கப்படும் செஸ்ஸிலிருந்து தனி வார்ட் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறார்களே, அதற்கு அரசு உடனடியாக உதவி செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட மருத்துவமனை அதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் தனியாக வேலூர் மாநகரத்திலே ஒரு டி.பி. ஆஸ்பிடல் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்த மாவட்டத்தை டிஸ்டிரிக்ட் டியூபர்குளோசிஸ் ஆபீசர் அவர்களை வைத்து எல்லாப் பகுதிகளிலும் ஸ்கிரினிங் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட
சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 15—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பதை தளர்த்தி தேவைப்படும் இடங்களில் மேலும் சுகாதார நிலையங்கள் துவங்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) இதுவரை எத்தனை ஒன்றியங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன?